செய்தி வெளியீடு எண். 125 நாள்: 01.03.2018

## திருவள்ளூர் டி.ஆர்.பி.சி.சி.சி மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை இரண்டாமாண்டிற்க்கான அரசுப் பொதுத் தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

திருவள்ளூர் டி.ஆர்.பி.சி.சி.சி மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை இரண்டாமாண்டிற்க்கான அரசுப் பொதுத் தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.03.2018) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

திருவள்ளூர் மாவட்டத்தில் மேல்நிலை இரண்டாமாண்டிற்க்கான அரசுப் பொதுத் தேர்வு இன்று 01.03.2018 முதல் 06.04.2018 வரையில் நடைபெறவுள்ளது. இத்தேர்வில் 20,934 ஆண்களும், 23,191 பெண்களும் ஆக மொத்தம் 44,125 தேர்வர்கள் தேர்வு எழுதவுள்ளனர். இன்று மொழி தாள்-1 தேர்வினை 43,659 மாணவர்கள் தேர்வு எழுதினர். 466 மாணவர்கள் தேர்வு எழுத வரவில்லை. இத்தேர்வுகளுக்கு 113 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. பூந்தமல்லி பார்வையற்றோர் பள்ளியில் 20 மாணவர்களும் மற்றும் நேத்ரோதயா சிறப்பு பள்ளியை சேர்ந்த பார்வையற்ற 4 மாணவர்களும் 2 மாணவிகளும் தேர்வெழுதுகின்றனர். மேலும், சிறைவாசிகளின் வசதிக்காக புழல் மத்திய சிறையில் தனித்தேர்வர் மையம் ஒன்று அமைக்கப்பட்டு, இம்மையத்தில் 103 சிறைவாசிகள் தேர்வெழுதவுள்ளனர். மேல்நிலைத் தேர்விற்காக வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களாக இம்மாவட்டத்தில் 17 கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கட்டுக்காப்பு மையத்திற்கும் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவரும் மூத்த முதுகலை ஆசிரியர் ஒருவரும் நியமனம் செய்து ஆக மொத்தம் 34 வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 113 தேர்வு மையங்களுக்கும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை முதன்மைக் கண்காணிப்பாளர்களாகவும், மூத்த முதுகலை ஆசிரியர்களை துறை அலுவலர்களாகவும் அனைத்து தேர்வு மையங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்களின் எண்ணிக்கை 400க்கும் அதிகமாக உள்ள மையங்களுக்கு கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர்களும், கூடுதல் துறை அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் நரம்பியல் குறைபாடு காரணமாக பாதிக்கப்பட்ட தேர்வர்களுக்கு தேர்வு எழுத சலுகையாக கூடுதல் ஒருமணிநேர சலுகை 176 மாணவர்களுக்கும், சொல்வதை எழுதுவோர் சலுகை 125 மாணவர்களுக்கும் அரசுத் தேர்வுகள் இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் மூலமாக சொல்வதை எழுதும் ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து தேர்வு மையங்களுக்கும் 20 தேர்வர்கள் கொண்ட ஓர் அறைக்கு ஓர் அறை கண்காணிப்பாளர் வீதம் 2306 அறை கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்கள் ஒழுங்கீனச் செயல்களை தடுக்கும் பொருட்டு 74 பறக்கும் உறுப்பினர்களும், 250 நிரந்தரப்படை உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படும் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் தேர்வு மையத்தினை திடீர் ஆய்வு மேற்கொள்வார்கள்.

வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாள்களை கொண்டு செல்ல 31 வழித்தடங்கள் அமைக்கப்பட்டு இவ்வழி தடங்களுக்கு 62 வழித்தட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வாகள் தேர்வு எழுதும் போது தேர்வறைக்குள் அனுமதிக்கப்படாத ஆவணங்கள் மொபைல் போன், கால்குலேட்டர், வாட்ச், ஷூ, பென்டிரைவர், பெல்ட் மற்றும் பா்ஸ் போன்றவற்றை எடுத்துச் செல்ல அனுமதி இல்லை என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர். த. இராஜேந்திரன் மற்றும் பள்ளிகல்வித் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**